**25.02.2020**

## பத்திரிக்கை செய்தி

## மெட்ரோ இரயில் நிலையங்களில் இன்று (25.02.2020) நடைபெற்ற இலவச மருத்துவ முகாம்களில் 1272 நபர்கள் பயணடைந்தனர்

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், அப்போலோ மருத்துவமனையுடன் இணைந்து மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் நேற்று (24.02.2020) முதல் வருகின்ற பிப்ரவரி 28 வரை காலை 8 மணி முதல் 12 மணி வரை மற்றும் மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரை மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெறுகிறது.

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் இன்று (25.02.2020) சென்ட்ரல் மெட்ரோ, ஏஜி டி.எம்.எஸ், சைதாப்பேட்டை, ஆலந்தூர், எல்.ஐ.சி, திருமங்கலம், வடபழனி, வண்ணாரப்பேட்டை, ஈக்காட்டுத்தாங்கல், ஆயிரம் விளக்கு, அண்ணா நகர் கோபுரம் மற்றும் செனாய் நகர் மெட்ரோ ஆகிய 12 மெட்ரோ இரயில் நிலையங்களில் காலை 8 மணி முதல் 12 மணி வரையும் மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையும் நடைபெற்றன. மெட்ரோ பயணிகள், பொதுமக்கள் மற்றும் மெட்ரோ ஊழியர்கள் காலையில் 548 பேரும் மாலையில் 724 பேர் உட்பட சுமார் 1272 பேர் இந்த முகாமில் இன்று பயனடைந்தனர்.

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில்

பி.எம்.ஐ (உயரம் மற்றும் எடை),
இரத்த அழுத்தம்,
சீரற்ற இரத்த சர்க்கரை, மற்றும்
ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் நாளை (26.02.2020) முதல் 28.02.2020 வரை மூன்று நாட்களுக்கு சென்ட்ரல் மெட்ரோ, ஏஜி டி.எம்.எஸ், சைதாப்பேட்டை, ஆலந்தூர், எல்.ஐ.சி, திருமங்கலம், வடபழனி, வண்ணாரப்பேட்டை, ஈக்காட்டுத்தாங்கல், ஆயிரம் விளக்கு, அண்ணா நகர் கோபுரம் மற்றும் செனாய் நகர் மெட்ரோ ஆகிய 12 மெட்ரோ இரயில் நிலையங்களில் காலை 8 மணி முதல் 12 மணி வரை மற்றும் மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரை நடைபெறுகிறது.

மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்கள் இந்த இலவச மருத்துவ முகாமை பயன்படுத்தி பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.